# நிதி திட்டமிடல் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, வடமாகாணம்

## பாதுகாப்புச் சேவை, சுத்திகரிப்புச் சேவை தொடர்பான

## <u>கேள்வி கோரல் 2023</u>

1) வடமாகாண நிதி, திட்டமிடல் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் அமைச்சுப் பெறுகைக் குழுத் தலைவர் (PMPC- Major) அவர்களால் தகுதி வாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக் கேள்விதாரர்களிடமிருந்து பாதுகாப்புச் சேவை மற்றும் சுத்திகரிப்புச் சேவைகளுக்கு கேள்விகள் கோரப்படுகின்றன.

Bid No. NP/05/02/PROC/SEC/2023

***(பாதுகாப்புச்சேவை)***

| தொ. இல | மாவட்டம் | ஆளணி எண்ணிக்கை பகல் / இரவு |
|---|---|---|
| 1 | யாழ்ப்பாணம் | 18 |
| 2 | கிளிநொச்சி | 04 |
| 3 | முல்லைத்தீவு | 06 |
| 4 | மன்னார் | 04 |
| 5 | வவுனியா | 06 |
| | **மொத்தம்** | **38** |

Bid No. NP/05/02/PROC/CLE/2023

***(சுத்திகரிப்புச்சேவை)***

| தொ. இல | மாவட்டம் | ஆளணி எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | யாழ்ப்பாணம் | 15 |
| 2 | கிளிநொச்சி | 03 |
| 3 | முல்லைத்தீவு | 03 |
| 4 | மன்னார் | 03 |
| 5 | வவுனியா | 04 |
| | **மொத்தம்** | **28** |

2) கேள்வி கோரல்கள் யாவும் தேசிய போட்டி விலைக்கேள்வி நடைமுறையின் ஊடாக மேற்கொள்ளப்படும்.

3) ஒப்பந்தம் அளிப்பிற்கு தகுதி பெற்றுக்கொள்வதற்கு கேள்வி கோரலில் வெற்றிபெற்ற விலைக் கேள்விதாரர்கள் கறுப்புபட்டியலில் இடம்பெறாமல் இருப்பதுடன் பின்வரும் தேவைப்பாடுகளையும் பூர்த்திசெய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

அ. கேள்விதாரர் வலிதான வியாபார பதிவினை கொண்டிருத்தல் வேண்டும்

ஆ. பாதுகாப்பு சேவையினை வழங்குவதற்கான பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெறப்பட்டிருத்தல் வேண்டும்

4) ஒப்பந்தம் மேற்கொள்வதற்கு மற்றும் ஒப்பந்தம் வலுப்பெறுவதற்கும், கேள்விதாரர் வடக்கு மாகாணத்தில் தனது பதிவு செய்யப்பட்ட அலுவலகம் அல்லது கிளையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

5) ஒப்பந்த அளிப்பினை பெற்றுக்கொள்வதற்கான தகுதியினை பெற்றுக்கொள்வதற்கு குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளின் பிரகாரம் கேள்விப்பத்திரதாரர் அடிப்படைத் தகுதியினை விலைக்கேள்வித் தரவு பிரிவு – 02 இன் பிரகாரம் பூர்த்தி செய்தல் வேண்டும்.

6) தகுதி வாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக் கேள்விதாரர்கள் மேலதிக விபரங்களையும், விலைக் கேள்விப் பத்திரங்களையும் அலுவலக நேரங்களில் கண்டி வீதி, கைதடி எனும் முகவரியில் அமைந்துள்ள நிதி, திட்டமிடல் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, வடமாகாண அலுவலகத்தில் மு.ப 9.00 மணி தொடக்கம் பி.ப 15.30 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

7) தகுதிவாய்ந்த விலைக் கேள்விதாரர்கள் கேள்விப் பத்திரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பக் கடிதத்தினைச் சமர்ப்பித்து அலுவலக நாட்களில் 17.10.2022 ம் திகதி தொடக்கம் 08.11.2022ம் திகதி வரை மு.ப. 9.00 மணி தொடக்கம் பி.ப.15.30 மணிவரை வடமாகாண நிதி, திட்டமிடல் மற்றும் உள்ளூராட்சி அமைச்சில் பெற்றுக்கொள்ளலாம். ஒவ்வொரு விலைக் கேள்விப்பத்திரத்திற்கும் மீளளிக்கப்படமுடியாத கேள்வி வைப்புப் பணத்தினை பின்வரும் அடிப்படையில் காசாக செலுத்தி விலைக்கேள்வி பத்திரத்தினை பெற்றுக்கொள்ளலாம்.

| தொ. இல | விபரம் | மீளளிக்கப்படமுடியாத கட்டணம் |
|---|---|---|
| 1. | பாதுகாப்புச் சேவை | 4,000.00 |
| 2. | சுத்திகரிப்புச் சேவை | 2,000.00 |

8) விலைக்கேள்விப் பத்திரங்கள் 09.11.2022 ம் திகதி மாலை 14.30 மணிக்கு முன்பதாக இவ்வமைச்சில் நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ சேர்ப்பிக்கப்படல் வேண்டும். பிந்திய விலைக்கேள்வி விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும். கேள்வி கோரல் விண்ணப்பங்கள் யாவும் கேள்வி கோரல் மூடியதனைத் தொடர்ந்து கேள்விதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.

9) கேள்விப் பத்திரத்தில் குறித்ததுரைக்கப்பட்டவாறு விலைக்கேள்விதாரரால் விலைக்கேள்விப் பிணைப் பொறுப்பு பின்வருமாறு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

| தொ. இல | விபரம் | தொகை ரூபா. | செல்லுபடியாகும் காலம் |
|---|---|---|---|
| 1. | பாதுகாப்புச் சேவை | 180,000.00 | 09.11.2022 - 07.02.2023 |
| 2. | சுத்திகரிப்புச் சேவை | 76,500.00 | 09.11.2022 - 07.02.2023 |

**தலைவர்,**
**மாகாண அமைச்சின் பெறுகைக்குழு.**
**நிதி திட்டமிடல் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு,**
**வடமாகாணம்**
**கண்டி வீதி, கைதடி,**
**யாழ்ப்பாணம்.**
**தொலைபேசி : 021-201-6115**
**தொலைநகல் : 021-205-7120**